00009

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பள்ளிக்கல்வி உயர்சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022

இறுதிப் பரீட்சை

**ESC2217 / EPA2517 / EPC2517 / EPE2517**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 01.07.2023 நேரம்: மு.ப. 9.30 - பி.ப 12.30

- பகுதி ஒன்றிலுள்ள சகல வினாக்களுக்கும் பகுதி இரண்டிலுள்ள வினாக்களுள் யாதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி - I

1. பின்வரும் பதங்களை விளக்கி வரையறுக்குக.
   (அ) கருக்குடும்பம்
   (ஆ) கூட்டுக்குடும்பம்
2. பிள்ளைகளின் வாசிப்பு ஆற்றலை முன்னேற்ற பெற்றோர் பின்பற்றக் கூடிய படிமுறைகள் ஐந்தினை (05) குறிப்பிடுக.
3. "தாய்மார் வெளிநாடுகளுக்குச் செல்ல நிர்பந்திக்கப்படுவதால் ஒரு மில்லியனுக்கும் அதிகமான பிள்ளைகள் தாய்மார் இல்லாது உள்ளனர் என (Save The Children) அமைப்பு கணிப்பிட்டுள்ளது." இந்த நிலைமையின் பாதிப்புக்கள் ஐந்தினை (05) பட்டியலிடுக.
4. நான்கு வயதிற்கும் ஐந்து வயதிற்கும் இடைப்பட்ட பிள்ளைகளின் சமூகவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?
5. முன்பிள்ளைப் பருவப் பிள்ளைகள் திறன்பேசிகளைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் பாதிப்புக்கள் ஐந்தினை (05) பட்டியலிடுக.
6. இயற்கைவாதம் ரூசோவினால் அறிமுகம் செய்யப்பட்டது. இயற்கைவாத அணுகுமுறையைச் சுருக்கமாக விளக்குக.
7. பிள்ளை மையக் கல்விக்கு "மரியா மொண்டிசூரி அம்மையாரின்" பங்களிப்பைச் சுருக்கமாக விளக்குக.
8. இலங்கையில் பாதிக்கப்படக்கூடிய பிள்ளைகள் என்ற வகைக்குள் உள்ளடங்கக் கூடிய குழுக்களைப் பட்டியலிடுக.

(5 X 8= 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. "சமூக இடைவினை, சகபாடிகளின் ஆதரவு என்பன சமூகமயமாக்கலில் முக்கியமானவை"
   i. பொருத்தமான உதாரணங்களுடன் சகபாடிகள் இடைவினையானது எவ்வாறு முன்பள்ளிப் பிள்ளைகளின் சமூகமயமாக்கலிற்கு துணை புரிகின்றதென விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. இளம்பிள்ளைகளின் சமூகமயமாக்கலுக்கு குடும்பத்தின் செல்வாக்கினை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

10.

i. முன்பிள்ளைப் பருவத்தில் தமது பிள்ளைகளுக்கு கரிசனை வழங்குவதில் ஒற்றைப் பெற்றோரைக் கொண்ட குடும்பம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் **நான்கினைக்** (04) குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

ii. பிள்ளையின் முழு விருத்திக்கு குடும்பத்தின் பங்களிப்பை விளக்குக.

(06 புள்ளிகள்)

iii. பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு உதவுவது தொடர்பான விழிப்புணர்வு மேற்கொள்ளும் போது கவனத்தில் எடுக்க வேண்டிய **மூன்று** (03) விடயங்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

11.

i. பிள்ளைகளில் செல்வாக்குச் செலுத்தும் நான்கு விதமான வெகுஜென ஊடகங்களைப் பட்டியலிடுக.

(06 புள்ளிகள்)

ii. மேலே நீங்கள் குறிப்பிட்ட ஊடகங்களில் ஏதாவது ஒன்றினை தெரிவு செய்து அது எவ்வாறு பிள்ளைகளின்

(அ) அறிகைப்புல விருத்தி

(ஆ) உணர்வு விருத்தி

என்பவற்றில் தாக்கம் செலுத்துமெனக் கலந்துரையாடுக.

(07X2=14 புள்ளிகள்)

12. "சில பெற்றோர் தமது பிள்ளைகளின் பாதுகாப்பிலும் கரிசனையிலும் குறைந்தளவு அக்கறையெடுப்பது அவதானிக்கப்படுகின்றது"

i. இக்கூற்றினை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா? உமது விடையை நியாயப்படுத்துக.

(06 புள்ளிகள்)

ii. இந்த நிலைமைக்கு செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **மூன்றினைக்** (03) குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

iii. இந்த நிலைமை தவிர்ப்பதற்கு முன்பள்ளி ஆசிரியர் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் எவை?

(08 புள்ளிகள்)

13.

i. பிள்ளையின் முழுவிருத்தியில் பௌதீகச் சூழலின் செல்வாக்கினை விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. பிள்ளையின் முழுவிருத்திக்கு வசதியளிக்கத்தக்கதாக முன்பள்ளியின் பௌதீகச் சூழலை எவ்வாறு ஒழுங்குபடுத்தலாமென விளக்குக.

(10 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -